THE HON. SRI M. A. MANICKAVELU : (a) The District Agricultural Officers are empowered to purchase dead stock articles made in India up to a limit of Rs. 300 for experimental cultivation, demonstration and propaganda purposes.

(b) These powers were delegated for two years in August 1958 and extended for another one year in June 1960.

SRI V. K. KOTHANDARAMAN : பல ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்படுத்தப்பட்ட ஒரு வரம்புக்கு உட்பட்டிருக்கும் காரணத்தினால், இப்பொழுது விலைவாசி உயர்ந்திருக்கும் அளவுக்கு, அதை அதிகப்படுத்தக்கூடிய உத்தேசம் ஏதாவது உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதை உடனே அதிகப் படுத்துவதற்கு அவ்வளவு அவசியம் இல்லை.

Women porters

* 100 Q.—SRI P. G. MANICKAM : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சென்னை ராஜ்யத்தில் ரயில் பிரயாணிகள் பெட்டி, படுக்கை சாமான்களை தூக்கிச் செல்ல பெண் போர்டர்களுக்கு லைசென்ஸுகள் வழங்குவதுபற்றி மத்திய கவர்ன்மெண்டு நம் மாகாண சர்க்காரை கலந்தாலோசித்தார்களா ?

(ஆ) அப்படியானால் பெண் போர்டர்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதுபற்றி எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI V. RAMAIAH : (a) No, Sir.

(b) Does not arise.

SRI P. G. MANICKAM : மற்ற ராஜ்யங்களில் பெண் போர்ட்டர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. ஏன் நமது ராஜ்யத்திலும் அவ்வாறு பெண் போர்ட்டர்களை நியமிக்கக் கூடாது ? தனித்துப் பிரயாணம் செய்யும் பெண்களுடைய சாமான்களை எடுத்துச் செல்ல பெண் போர்ட்டர்கள் உதவியாக இருப்பார்கள் அல்லவா ? சர்க்கார் இந்த யோசனையைப்பற்றிக் கவனிப்பார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : மற்ற ராஜ்யங்களில் இருக்கும் நிலைமை எனக்குத் தெரியாது. ஆனால், நமது அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இதுபோன்ற சிபார்சுகள் ஒன்றும் மத்திய அரசாங்கத்திற்குச் செய்யவில்லை.

SRI V. SANKARAN : பெண் போர்ட்டர்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதினால் ஆண் போர்ட்டர்களுக்கு வேலை கிடைக்காது என்ற ஆபத்தை உணர்ந்து, அம்மாதிரி யோசனை ஏதாவது வந்தால், அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதில்லை என்று தீர்மானிக்குமா ?

MR. SPEAKER : It is only a suggestion.

11th August 1960]

Sri A. VEDARATHNAM : குஜராத் போன்ற மாகாணங்களில் எல்லாம் இப்பொழுது பெண் போர்ட்டர்களுக்கு லைசென்ஸ் கொடுத்து, பெரும்பாலும் பெண் போர்ட்டர்கள்தான் ரயில்வே நிலையங்களில் வேலை செய்கிறார்கள். அந்த முறையை இங்கும் அனுஷ்டிப்பதில் அரசாங்கத்திற்கு என்ன சிரமம் இருக்கிறது என்பதைத் தயவுசெய்து அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா ?

The Hon. Sri V. RAMAIAH : குஜராத் மாகாணத்தில் இருக்கும் நிலை எனக்குத் தெரியாது என்று முன்பே சொல்லி விட்டேன். ஆனால், நமது ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில், பெண்கள் கொண்டுவரும் பொருள்களை ஆண் போர்ட்டர்கள் அதிகக் கஷ்டமில்லாமல் தூக்கிக்கொண்டு போவதைப் பார்க்கின்றோம். ஆகையால், இதிலே ஒரு மாறுதல் செய்யவேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

(There was noise due to the flight of a jet plane.)

The Hon. Sri R. VENKATARAMAN : The hon. Members are being treated to the noise of a jet plane, Sir.

Mr. SPEAKER : We are in a jet age.

Minimum wages for Government Transport workers

* 101 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any minimum wages have been fixed for the Motor Transport Workers in the Government Transport ; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) No separate minimum wages have been fixed for the workers in the Madras State Transport Department. The minimum wages fixed by the Government for employment in public motor transport under the Minimum Wages Act, 1948 are applicable to the workers in the State Transport Department. In addition to this I may add that Pay Commission has now determined their wages and pay scales.

Sri N. K. PALANISAMI : May I know, Sir, when the Government direct the private industries to fix minimum wages to their workers, why the Government are refusing to fix minimum wages to their industrial employees?

The Hon. Sri R. VENKATARAMAN : I said that the minimum wages have been fixed for the public motor transport workers and it is applicable to the State Transport workers and also the wages and pay scales are higher than that.